# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 17-09-2021 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

**பொருள் எண்.1**

குழித்துறை நகராட்சியில் பேருந்து நிலையம் செல்லும் கருங்கல் சாலையில் குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான சர்வே எண்.D12/82-ல் மீன்சந்தை மற்றும் தினசரி காய்கறி சந்தை 13380 ச.மீ. பரப்பளவில் செயல்பட்டு வருகின்றது. இதில் தினசரி காய்கறி சந்தை 8500 ச.மீ. பரப்பளவில் சுமார் 60 வருடங்களாகச் செயல்பட்டு வருகின்றது. அங்குள்ள கடைகள் அனைத்தும் 30 வருடங்களுக்கு முன்பாகக் கட்டப்பட்டதாகும். தற்பொழுது தினசரி காய்கறி சந்தையில் 254 எண்ணிக்கை கடைகள் தனித்தனியே ஏலம் விடப்பட்டு நடைமுறையில் உள்ளது. காய்கறி சந்தையின் மொத்த ஆண்டு வருமானம் ரூ.1,80,53,911/- ஆகும். கடைகள் அனைத்தும் மிகவும் பழுதடைந்து காணப்படுவதால் அதனை முற்றிலும் அகற்றி விட்டு புதியதாகக் கடைகள் கட்ட வேண்டியது அவசியமாகும். எனவே சந்தையில் உள்ள 253 கடைகளையும் இடித்து விட்டு புதியதாக 480 கடைகள், வாகன நிறுத்துமிடம், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடன் காய்கறிச் சந்தையை புதிப்பதற்கென தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகை ரூ.18.50 கோடி ஆகும். தற்பொழுது சட்டசபையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021-2022-ம் ஆண்டு சட்ட மன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மான்ய கோரிக்கையின் போது மார்க்கெட்டை புதுப்பிப்பதற்கென ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார். குழித்துறையில் மார்க்கெட்டை புதுப்பிப்பதற்கு ரூ.1.00 கோடி போதுமானதாக இல்லாத காரணத்தினால் கூடுதல் தொகையாக ரூ.17.50 கோடி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3727**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.2</u>**

குழித்துறை நகராட்சியில் மொத்தம் 1718 தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. இதை அனைத்தும் மின் ஆற்றல் சேமிப்பு திட்டத்தின்கீழ் LED விளக்குகளாக மாற்றுவதற்கு பிரேரணையை தயாரித்து சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.35871/2014/இ1, நாள் 08-09-2021-ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுவதற்கென ரூ.183.00 இலட்சத்திற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற சமர்ப்பிக்கப்படுகிறது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3728**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.3</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாய கழிப்பிடங்கள் வெட்டுவெந்நி சப்பாத்து சமீபம் உள்ள கழிப்பறை, வி.எல்.சி. சப்பாத்து சமீபம் மற்றும் மார்த்தாண்டம் காய்கறி சந்தை பகுதியில் அமைந்துள்ள கழிப்பறைகளையும் பராமரிப்பு செய்ய ரூ.3.00 இலட்சமும், வி.எல்.சி. ஆடிட்டோரியம் பகுதியிலுள்ள பொதுக்கழிப்பிடத்தினை பராமரிப்பு செய்ய ரூ.5.00 இலட்சத்திற்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற சமர்ப்பிக்கப்படுகிறது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3729**

**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.4**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான மேம்பாலத்தின்கீழ் அமைந்துள்ள சாலையில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வினியோக பிரதான குழாயில் அடிக்கடி பழுதடைந்து சாலை சேதமடைவதை தவிர்க்கும் பொருட்டு புதிதாக பிரதான குழாய் அமைப்பதற்கு ரூ.43.20 இலட்சம் நெடுஞ்சாலை துறையினரால் நிதியாக நகராட்சிக்கு வழங்கப்பட்டு குழாய் பொருத்துதல் மற்றும் சேதமடைந்த சாலையை சீரமைக்கும் பணியும் நடைபெற்று முடிந்தது. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நெடுஞ்சாலையில் பொருத்தப்பட்ட பகிர்மான குழாய்கள் தரமில்லாமலும் மிகவும் மெலிதான குழாய்களை பதித்ததினாலும் வீட்டு இணைப்பு குழாய்களில் பல இடங்களில் உடைவு ஏற்பட்டு சீரமைக்கப்பட்ட தார் சாலைகள் ஏராளமான இடங்களில் கீழ் சாலை தாழ்வடைந்து மோசமான நிலையில் காணப்படுகிறது. இச்சாலையினை சீரமைக்காததாலும் இங்கு தினமும் சராசரியாக 2cm மழை பெய்து வருவதாலும் மற்றும் கனரக வாகனங்கள் போக்குவரத்து அதிகமாக உள்ள காரணத்தினாலும் பல இடங்களில் குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு விபத்துகள் அதிகமாக ஏற்படுவதாக காவல் துறையிடமிருந்து மற்றும் வர்த்தக சங்கத்திடமிருந்தும் புகார்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சாலையை சீரமைத்து தருமாறு கேட்டு கோரிக்கை வைத்துள்ளது. எனவே அனைத்து கோரிக்கைகளையும் கருத்தில் கொண்டும், இச்சாலையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் நலன் கருதி சேதமடைந்த சாலையினை சீரமைப்பதற்கு ரூ.6,50,000/-க்கு மதிப்பீட்டில் மேற்படி பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சேதமடைந்த சாலையினை சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3730**
**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.5**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN75AL.6628-ற்கு தகுதிசான்று பெற வேண்டியதுள்ளதால் வாகனத்திலுள்ள பழுதுகள் நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.30,000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டிற்கும் பழுது வேலைகள் நீக்கம் செய்யவும் அதற்கான தொகையினை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3731**
**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.6**

ஒருங்கிணைந்த முறையில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் செயல்படுத்திட (FSTP) Structural Design and drawing வழங்க முதல்வர் திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிக்கு ரூ.17,700/-க்கு செலுத்த வேண்டியதுள்ளதால் அத்தொகையினை வருவாய் நிதியின் கீழ் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3732**
**அனுமதிக்கப்படுறது.**

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-09-2021 வியாழக்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண்.1

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாரந்திர ஆய்வு கூட்ட அறிவுரையின்படி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள குடியிருப்புகளில் உருவாகும் திடக்கழிவுகளை உலர்ந்த கழிவுகள் மற்றும் ஈரக்கழிவுகள் என வீட்டிலேயே பிரித்து உலர்க் கழிவுகளை (பேப்பர், அட்டை, கண்ணாடி, பாட்டில் பிளாஸ்டிக், ரப்பர் துணி இன்னும் பிற) நகராட்சி பணியாளர்களிடமும் ஈரக்கழிவுகளை (காய்கறி கழிவுகள், பழம், பூ மற்றும் மட்கக்கூடிய கழிவுகள்) அவரவர் வீட்டிலேயே உரமாக்கும் முறையினை நடைமுறைபடுத்த தெரிவிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகளினை முழுமையாக கடைப்பிடித்து உள்ளாட்சி நிர்வாகத்திற்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வேண்டியது இன்றியமையாதது என்பதினை கருத்தில் கொண்டு குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளிலும், வீடுகளில் உருவாகும் மேற்படி மட்கும் கழிவுகளை வீட்டிலேயே உரமாக்க உரிய ஆலோசனைகள் மற்றும் மேற்படியான நடவடிக்கைகளை நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.- பொதுசுகாதாரப்பணிகளின் அத்தியாவசியம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கூட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் முக்கியத்துவம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3733**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.2</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு களப்பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தேவைப்படும் அனைத்து உபகரணங்களும் அரசு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்மஸ் இண்ட்கோ சர்வீஸ், தேனி-யிடமிருந்து வாங்கிடவும் செலவினத்தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3734**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.3</u>**

குழித்துறை நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்கும் பணிக்கு மருந்துகள் மற்றும் உரிய கிருமி நாசினிகள் தமிழ்நாடு மல்டிபர்மஸ் இண்ட்கோ சர்வீஸ், திருச்சிராப்பள்ளி என்னும் அரசு நிறுவனத்திடமிருந்து வாங்கிடவும், செலவினத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.152/2020/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3735**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.4</u>**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணியாற்றும் திரு. ஜீன்ஸ் என்பவருக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1% தொகையானது ரூ.99450/- காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3736**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.5</u>**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிபுரியும் திரு.பி. ஜெயச்சந்திரன் என்பவரின் பெயரில் 2017-2018-ம் ஆண்டில் செய்த வேலைக்கு PSD, FSD பட்டியலில் பிடித்தம் செய்த ரூ.13725/- காலம் கடந்த வைப்பு தொகையாக உள்ளதால் அதனை வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு. - அனுமதிக்கலாம்

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3737**
**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.6</u>**

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர், தூய்மை பணி மேற்பார்வையாளர் மற்றும் மகப்பேறு உதவியாளர்- களுக்கு 2021-2022-ம் ஆண்டிற்கான சீருடைகள் தையல் கூலிகள் உட்பட வழங்கிட உத்தேச செலவு ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம்) நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2346/2015/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3738**
**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.7</u>**

குழித்துறை நகராட்சி அரசின் விளம்பரம் மற்றும் 100 நாள் சாதனைகளை மாவட்ட ஆட்சியரின் அனுமதியி பேரில் தினசரி பத்திரிகைகைகள் மற்றும் புத்தகங்களில் வெளியிட்டதின் பேரில் கீழ்கண்ட பத்திரிக்கையிடமிருந்து பெறப்பட்டுள்ள பட்டியல் தொகையினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) தினகரன் நாளிதழ் - ரூ.9975/-
2) தமிழ் முரசு - ரூ.9975/-
3) தினத்தந்தி - ரூ.9841/-
4) தீக்கதிர் - ரூ.9800/-

5) தினமுரசு - ரூ.9975/-
6) விடுதலை - ரூ.7500/-
7) மாலை மலர் - ரூ.9912/-

---------------------

**ரூ.66,978/-**

---------------------

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1151/2017/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3739**
**அனுமதிக்கப்படுறது.**

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரராக பணிபுரியும் திரு.ஆர். சுரேஷ்ராஜ் என்பவர் செய்த பணியில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.91,330/- காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3740**
**அனுமதிக்கப்படுறது.**

**பொருள் எண்.9**

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்தக்காரர் திரு.எ. அணில்குமார் என்பவர் பெயரில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை ரூ.30,968/- வருவாய் நிதியிலும் ரூ.6,800/- குடிநீர் நிதியிலும் காலம் கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளதால் அதனை திருப்பி வழங்க மன்ற அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3741**
**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.10</u>**

குழித்துறை நகராட்சியில் மொத்தம் 1718 தெருவிளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. இது போக புதியதாக தெருவிளக்கு இல்லாத இடங்களில் மின்கம்பம் அமைத்து 182 தெருவிளக்குகள் அமைப்பதற்கென ரூ.85.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மின்கம்பம் இருக்கும் இடங்களில் புதியதாக 303 தெருவிளக்குகள் பொருத்துவதற்கு ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு இப்பிரேரணை சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. - மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3742**

**அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.11</u>**

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை 02-09-2021 அன்று பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

I. <u>ஓராண்டிற்குரிய குத்தகை இனங்கள்</u>

1) காய்கறி சந்தைக்குள் ஆடு, கோழி அடிக்கும் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

<u>ஓராண்டு குத்தகை தொகை</u>

(i) C. செல்வமணி, ரூ.43,000/-
S/o. செல்லப்பன்,
மேலே குழிவட்டம்,
மருதங்கோடு.

2) குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வி.எல்.சி. கலையரங்கம் குத்தகை உரிமம்

<u>ஓராண்டு குத்தகை தொகை</u>

(i) M. வினில்ராஜ், ரூ.5,10,000/-
S/o. முத்துகிருஷ்ணன்,
செக்கால விளைவீடு,
படந்தாலுமூடு.

பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் தொடர்ந்து நான்கு முறை ஏலம் விடப்பட்டுள்ளதாலும், நகராட்சி நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டும் இரண்டு இனங்களுக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2036/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3743**

**குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்படுறது.**

**<u>பொருள் எண்.12</u>**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் வாரந்திர ஆய்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதியுள்ள குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து உற்பத்தியாகும் கழிவுநீரை அவரவர் குடியிருப்பு வணிகவளாகத்தின் ஒருபகுதியில் உறிஞ்சிகுழி (Soak pit) அமைத்து அதில் மேற்படி கழிவுநீரை விட்டு நீர்நிலைகள் மாசுபடாமல் நடவடிக்கை மேற்கொள்ளவும், மழைநீர் வடிகால்களில் மழைநீர் மட்டும் செல்லும் வண்ணம் திட்டமிட்டு பணிகளை செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுசுகாதார நலன் காக்கும்பொருட்டு பொதுசுகாதார சட்ட விதிகளை முழுமையாக கடைப்பிடித்து உள்ளாட்சி நிறுவனத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் மேற்படி அறிவுரைபடி குழித்துறை நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் உருவாகும் கழிவுநீரை அவரவர் குடியிருப்பு, வணிகவளாகத்தின் ஒருபகுதியிலேயே உரிய முறைபடி உறிஞ்சுகுழி அமைத்து அதில் கழிவுநீரை விடுவதற்காக ஆலோசனைகள் மற்றும்

தொடர் நடவடிக்கைகளை குழித்துறை நகராட்சி மூலம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது-

அ.கு.- நீர்நிலைகள் மாசுபடா வண்ணம் காக்கும் - பொதுசுகாதார பணியின் அத்தியாவசியம் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கூட்ட நடவடிக்கையின் முக்கியத்துவம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண் : 3744**

**அனுமதிக்கப்படுறது.**

ஒப்பம்/- திரு.என். ராஜமாணிக்கம்,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/.உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.